[Regd. No. TN/CCN/117/2006-08.
[Price: Rs. 2.40 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 34] CHENNAI, FRIDAY, FEBRUARY 8, 2008
Thai 25, Sarvajith, Thiruvalluvar Aandu–2039

Part III—Section 1(a)

General Statutory Rules, Notifications, Orders, Regulations, etc., issued by Secretariat Departments.

NOTIFICATIONS BY GOVERNMENT

HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT

TAMIL NADU TOWN AND COUNTRY PLANNING STATE INFRASTRUCTURE AND AMENITIES FUND RULES, 2008.

[G.O. Ms. No. 30, Housing and Urban Development (UD4-1), 7th February 2008.]

No. SRO A-4(a)/2008.

In exercise of the powers conferred by sub-section *(1)* of Section 122 read with Section 63-C of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), the Governor of Tamil Nadu hereby makes the following Rules:—

1. *Short Title.*—These Rules may be called the Tamil Nadu Town and Country Planning State Infrastructure and Amenities Fund Rules, 2008.

2. *Definition.*—In these rules, unless the context otherwise requires,—

(*a*) "Act" means the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

(*b*) "auditor" means the Chief Internal Auditor and Chief Auditor of Statutory Boards or his nominee.

(*c*) "committee" means the State Infrastructure and Amenities Promotion Committee constituted under rule 3.

(*d*) "Infrastructure" means the sum of technical installations, and social institutions creating a basis for human activities. Specifically it is the physical equipment needed to provide services such as transport, power, water supply, sewerage, drainage, communications, and access.

(*e*) "local authority" means—

(i) Municipal Corporation established under any law for the time being in force; or

(ii) a Municipal Council or a Third Grade Municipality or a Town panchayat constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920); or

(iii) a Panchayat Union Council or a Village Panchayat constituted Tamil Nadu Pan Nadu Act 21 of 1994);

(f) "fund" means the State Infrastructure and Amenities Fund constituted under Section 63-C of the Act.

(2) The words and expression used in these Rules and not defined, but defined in the Act shall have t meaning respectively assigned to them in the Act.

3. *Administration of the fund:*—(i) The fund shall vest in and be need and administered by the State Infrastructure and Amenities Promotion Committee, for the purposes of the Act, subject to the provisions of the Act and these Rules. The Committee shall consist of the following Officials:—

1. Secretary to Government, Housing and Urban Development Department - Chairman
2. Secretary to Government, Finance Department - Member
3. Secretary to Government, Planning and Development and Special Initiative Department - Member
4. Secretary to Government, Rural Development and Panchayat Raj Department - Member
5. Secretary to Government, Municipal Administration and Water Supply Department - Member
6. Vice-Chairman of the Chennai Metropolitan Development Authority - Member
7. Director of Town and Country Planning - Member Secretary.

(ii) The Committee shall meet as often as necessary and in any case, not less than once in three months. in case of urgency, approval of the members may be obtained by circulation.

(iii) The Committee shall be entrusted with the selection of schemes, funding pattern and other related matters It shall monitor implementation of the schemes and order release of funds as and when it deems necessary.

(iv) Implementing agencies shall present their project reports to the Committee and after approval by the Committee or the Government as the case may be funds may also be released directly to the implementing agency.

(v) *Receipts:* The amount realized through the levy and collection of Infrastructure and Amenities Charges as outlined in Rule 4 and Rule 9 of the Tamil Nadu Town and Country Planning (Levy of Infrastructure and Amenities Charges) Rules, 2008 shall be credited to the Government Account. The amount remitted as above shall be transferred to the Fund by the Government annually.

4. *Audit.*—(1) The accounts of the fund shall be audited once in a year by the Auditor.

(2) The Committee shall submit all the accounts of the fund to the Auditor within forty five days from the close of the finance year to which the accounts relate.

(3) The auditor may,—

(*a*) by issuing summons, in writing, require production of any books, deeds, contracts, account, vouchers. receipts or other documents, the perusal or examination of which he consider necessary;

(*b*) by issuing summons, in writing, require any person having the custody of control or any such documents or accountable for them to appear in person before him;

(*c*) require any person so appearing to make and sign a declaration with respect of such document or to answer any question or to prepare and furnish any statement relating thereto.

(4) The auditor shall,—

(*a*) report to the committee any material impropriety or irregularity, which he may observe, in the expenditure or the recoveries of monies, if any, due to the fund's accounts;

(*b*) advise the committee on the lines and forms in which the such various accounts of the fund shall be maintained, so as to avoid any such impropriety or irregularity, including other measures, as may be considered necessary;

Verified © RealEstate ™

(c) furnish to the committee, such information as it may require concerning the progress of audit;

(d) report to the committee any loss or wastage of monies caused by neglect or misconduct with the names persons, directly or indirectly responsible for such loss or wastage;

(e) submit to the committee the final statement of the audit and a duplicate copy thereof to the Government within a period of ninety days from the end of the financial year or within such other period as the Government may notify.

5. *Placing of the report before the Committee.*—The Member-Secretary of the committee shall place the audit report with his replies, thereto, before the committee and submit it to the Government through the auditor together with a copy of his replies and the resolution of the committee approving them within sixty days from the date of receipt of the audit report.

6. *Utilisation of the fund:*—(1) Monies from the fund may be advanced by the Government as grants, on such terms and conditions as the Government may determine, to the planning authorities or the local authorities or the Government agencies or the parastatal organisations or such other organizations, as the case may be, for implementing the infrastructure and amenities projects, which may include:—

(*a*) preparation of infrastructure investment plans;

(*b*) execution of the infrastructure investment plans in full or part ;

(*c*) any purpose incidental to the preparation or execution of infrastructure investment plans.

(2) The fund shall be utilised for translating the proposals of the respective development plans prepared in accordance with the provisions of the Act, into specific action programmes.

(3) Projects to be funded from the fund shall comprise essential infrastructure schemes. The committee shall decide the scheme to be implemented.

(4) The Committee may sanction funds to the implementing agencies or planning authorities or the local authorities or the Government agencies through the planning authorities or the local authorities, as the case may be, upto five crore rupees per scheme on capital expenditure and upto twenty lakh rupees on other items. The committee shall approach the Government for sanction of proposals, beyond this limit. For sanction of funds exceeding the said limits, the committee shall obtain the previous approval of the Government.

(5) Expenditure for administration, establishment or contingency all put together shall not exceed 5% of the total corpus of the fund available at any given time.

7. *Mode of control.*—(*a*) The Infrastructure and Amenities charges shall be transferred to the fund account.

(*b*) The fund account shall embody all financial transactions of receipts and payments. The fund account shall not deal with the credits and debits pertaining to other special schemes funded by the State or Central Government.

8. *Registers to be maintained:*—Maintenance of the following registers and records shall be under the overall control of the Member-Secretary of the Committee:—

1. Cash Book
2. Cheque Book
3. Pass Book
4. Register of grant
5. Ledger for classification of receipts and charges
6. Annual account
7. Stock Register and
8. Tools and Plants register
9. Register of Staff .

R. SELLAMUTHU,
Secretary to Government.

Verified by RealEstate

அறிவிக்கை

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 122 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழும். மேற்படி சட்டத்தின் 63-C பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் விதிகளை இதனால் இயற்றுகிறார்:-

1. *குறுந்தலைப்பு.*-இந்த விதிகள், தமிழ்நாடு 2008 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் (மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி) விதிகள் என அழைக்கப்படலாம்.

2. *விளக்கம்.*-இந்த விதிகளில், சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி மற்றபடி, (அ) "சட்டம் என்பது, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் (தமிழ்நாடு சட்டம் 35/1972) சட்டம்" எனப் பொருள்படும்;

(ஆ) "தணிக்கையாளர்" என்பது, தலைமை துறை தணிக்கையாளர் மற்றும் சட்டப்படிக்கான வாரியங்களின் தலைமை தணிக்கையாளர் அல்லது அவருடைய நேமகதாரர்" எனப் பொருள்படும்.

(இ) "குழு" என்பது 3 ஆம் விதியின்கீழ் அமைக்கப்பட்ட மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் குழு எனப் பொருள்படும்.

(ஈ) "உள் கட்டமைப்பு" என்பது, மனித நடவடிக்கைகளுக்கான ஓர் அடிப்படையை உருவாக்குகிற தொழில்நுட்ப நிறுவு சாதனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் எனப் பொருள்படும். குறிப்பாக, அது, போக்குவரத்து, மின்சக்தி, குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், வடிகால், தகவல் தொடர்புகள் மற்றும் அணுகு சாதனம் போன்ற சேவைகளை வழங்குவதற்குத் தேவைப்படுகிற கட்டமைப்புச் சாதனமாகும்.

(உ) "உள்ளாட்சி அதிகார மன்றம்" என்பது-

(i) அப்போது செயலிலுள்ள யாதொரு சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மாநகராட்சி அல்லது

(ii) தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம் அல்லது ஒரு மூன்றாம்நிலை நகராட்சி அல்லது ஒரு பேரூராட்சி; அல்லது

(iii) தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) கீழ் அமைக்கப்பட்ட ஒரு ஊராட்சி ஒன்றியக் குழு அல்லது ஒரு கிராம ஊராட்சியாகும்.

(ஊ) "நிதி" என்பது, மேற்படி சட்டத்தின் 63-C பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி எனப் பொருள்படும்.

(2) இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டு பொருள் விளக்கம் அளிக்கப்படாத ஆனால் சட்டத்தின் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள சொற்கள் மற்றும் தொடர், சட்டத்தில் அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தந்த பொருளைக் கொண்டிருக்கும்.

3. *நிதி நிருவாகம்.*-

(i) இந்தச் சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் இந்த விதிகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, இந்த நிதி, மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் குழுவிடம் நிலைபெற்றிருக்கும் மற்றும் அதற்குத் தேவைப்படுவதாகவும், அது பயன்படுத்துவதாகவும் இருக்கும். இக்குழு, பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருக்கும்:-

1. அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை-தலைவர்
2. அரசு செயலாளர், நிதித் துறை-உறுப்பினர்
3. அரசு செயலாளர், திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறை-உறுப்பினர்
4. அரசு செயலாளர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் துறை-உறுப்பினர்
5. அரசு செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை-உறுப்பினர்
6. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத்தலைவர்-உறுப்பினர்
7. நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் துறை இயக்குநர்-உறுப்பினர் செயலாளர்.

(ii) குழு, தேவைக்கேற்ப அடிக்கடி மற்றும் எவ்வாறாயினும், மூன்று மாதங்களுக்குக் குறையாமல் ஒருமுறை கூடும். அவசர நேர்வில், சுற்றோட்டத்தின் மூலம் உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்படலாம்.

(iii) திட்டங்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது, நிதியுதவி அளிக்கும் முறை மற்றும் தொடர்புடைய பிற விவகாரங்கள் குறித்து முடிவெடுக்கும். அது, திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணித்து, அது, அவசியம் என்று கருதுகிறபோது நிதியை வழங்க ஆணை பிறப்பிக்கும்.

செயல்படுத்தும் முகவரமைப்புகள், தங்களுடைய திட்ட அறிக்கைகளை, குழுவிடம் அளிக்கும் நேர்விற்கேற்ப, குழு ஆணை அளித்து, பின்னர், நிதி, செயல்படுத்தும் முகவரமைப்பிடம் நேரடியாகவும் வழங்கப்படலாம்.

விதிகள்:—

தமிழ்நாடு 2008 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் விதிகளைச் (உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணங்கள்) சேர்ந்த 4 ஆம் விதி மற்றும் 9 ஆம் விதியில் கோடிட்டுக் காட்டியுள்ளவாறு, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணங்களை விதித்து, வசூலிப்பதன் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை, அரசுக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். மேற்சொன்னவாறு செலுத்திய தொகை, ஆண்டுதோறும் அரசால், நிதிக்கு மாற்றப்படும்.

4. *தணிக்கை*:—(1) நிதியின் கணக்குகள், தணிக்கையாளரால் ஆண்டுக்கு ஒரு முறை, தணிக்கை செய்யப்படும்.

(2) குழு, நிதியின் அனைத்துக் கணக்குகளையும், அவை, எந்த நிதியாண்டுடன் தொடர்புடையதோ அந்த நிதியாண்டு முடிவடைந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள், தணிக்கையாளரிடம் அளிக்க வேண்டும்.

(3) தணிக்கையாளர்,

(அ) எழுத்து மூலமான அழைப்பாணைகளை அளிப்பதன் மூலம், அவர் பரிசீலிப்பதற்கு அல்லது பார்வையிடுவதற்கு அவசியம் என்று கருதுகிற ஏதேனும் புத்தகங்களை, பத்திரங்களை, ஒப்பந்தங்களை, கணக்குகளை, கைச்சாத்துகளை இரசீதுகளை அல்லது பிற ஆவணங்களை அளிக்குமாறு கோரலாம்.

(ஆ) எழுத்து மூலமான அழைப்பாணைகளை அளிப்பதன் மூலம், அத்தகைய ஏதேனும் ஆவணங்களை பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்துள்ள அல்லது அவற்றுக்குப் பொறுப்பு வகிக்கும் யாதொரு நபரை, அவர் முன்னிலையில், நேரடியாக ஆஜராகுமாறு கோரலாம்.

(இ) அவ்வாறு ஆஜராகிற யாதொரு நபரிடம், அத்தகைய ஆவணம் தொடர்பாக உறுதிமொழி ஒன்றை அளித்து, கையொப்பமிடுமாறு அல்லது அது தொடர்பாக ஏதேனும் வினாவுக்கு விடையளிக்குமாறு அல்லது அது தொடர்பாக, ஏதேனும் விவர அறிக்கையைத் தயாரித்து, அளிக்குமாறு கோரலாம்.

(4) தணிக்கையாளர்,—

(அ) நிதியின் கணக்குகளுக்குச் சேர வேண்டிய ஏதேனும் பண வசூல்களில் அல்லது செலவில் ஏதேனும் தவறான நடைமுறையை அல்லது முறைகேட்டை அவர் கண்டறிந்தால், குழுவிடம் தெரிவிக்கவேண்டும்;

(ஆ) அவசியம் என்று கருதக் கூடியவாறான ஏனைய நடவடிக்கைகள் உட்பட, அத்தகைய தவறான நடைமுறையை அல்லது முறைகேட்டைத் தவிர்ப்பதற்காக, நிதியின் பல்வேறு கணக்குகள் வைத்துவரப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் படிவங்கள் குறித்து குழுவிற்கு ஆலோசனை அளிக்கவேண்டும்;

(இ) தணிக்கையின் பணி முன்னேற்றம் தொடர்பாக அது கோரக்கூடிய அத்தகைய தகவலை, குழுவிற்கு அளிக்க வேண்டும்;

(ஈ) பண இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு நேரடியாக அல்லது மறைமுகமாகப் பொறுப்பு வகிக்கும் நபர்களின் பெயர்களுடன், அத்தகைய நபர்களின் கவனக் குறைவினால் அல்லது தவறான நடத்தையினால் ஏற்பட்ட பண இழப்பு அல்லது சேதம் குறித்து குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும்;

(உ) நிதியாண்டு முடிவடைந்த நாளிலிருந்து தொண்ணூறு நாட்கள் கால அளவிற்குள் அல்லது அரசு அறிவிக்கையிடன் கூடியவாறான அத்தகைய பிற கால அளவிற்குள், தணிக்கையின் இறுதி விவர அறிக்கையை, குழுவிற்கும், அதன் இரண்டாம் படியை, அரசுக்கும் அளிக்க வேண்டும்.

5. *குழுவிடம் அறிக்கையை அளித்தல்*:—குழுவின் உறுப்பினர் செயலாளர், தணிக்கை அறிக்கை வரப்பெற்ற நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள், அவருடைய பதில்களுடன் கூடிய தணிக்கை அறிக்கையை குழுவிடமும், அவருடைய பதில்கள் மற்றும் அவற்றுக்கு ஒப்புதலளிக்கிற குழுவின் தீர்மானம் ஆகியவற்றின் நகல் ஒன்றுடன் சேர்த்து, அதனை, தணிக்கையாளர் மூலம் அரசுக்கும் அளிக்க வேண்டும்.

6. *நிதியைப் பயன்படுத்துதல்*:—(1) உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, அரசு தீர்மானிக்கக் கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், நேர்விற்கேற்ப, திட்டமிடல் அதிகாரிகளுக்கு அல்லது உள்ளாட்சி மன்ற அதிகாரிகளுக்கு அல்லது அரசு முகவரமைப்புகளுக்கு அல்லது அரசுத்துறை நிறுவனங்களுக்கு அல்லது அத்தகைய பிற அமைப்புகளுக்கு, நிதியிலிருந்து, மானியங்களாக, அரசு, முன்பணம் வழங்கலாம். பின்வருபவை அதில் அடங்கலாம்.—

(அ) உள்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்;

(ஆ) உள்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டங்களை, முழுவதுமாக அல்லது ஒரு பகுதியை நிறைவேற்றுதல்;

(இ) உள்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு இடை நிகழ்வான ஏதேனும் நோக்கம்.

(2) சட்டத்தின் விதித்துறைகளுக்கிணங்க தயாரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களின் குறிப்பிட்ட செயல் திட்டங்களாகச் செயல்படுத்துவதற்கு, நிதி, பயன்படுத்தப்பட வேண்டும். சட்டம் 35/1972)

(3) நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட வேண்டிய திட்டங்கள், இன்றியமையாத உள்கட்டமைப்பு அதிகாரங்களைக் திட்டபபணிகளைக் கொண்டிருக்க வேண்டும். செயல்படுத்தப்பட வேண்டிய திட்டத்தை, குழு, தீர்மானிக்கும்.

(4) செயல்படுத்தும் முகவரமைப்புகளுக்கு அல்லது திட்டமிடல் அதிகாரிகளுக்கு அல்லது உள்ளாட்சி மன்ற அதிகாரிகளுக்கு அல்லது அரசு முகவரமைப்புகளுக்கு, திட்டம் ஒன்றுக்கு, மூலதனச் செலவுக்கு, ஐந்து கோடி ரூபாய் வரையிலும், ஏனைய இனங்களுக்கு இருபது லட்சம் ரூபாய் வரையிலும், நேர்விற்கேற்ப, திட்டமிடல் அதிகாரிகள் மூலம் அல்லது உள்ளாட்சி மன்ற அதிகாரிகள் மூலம், குழு நிதியை வழங்கலாம். இந்த வரையறைக்கு மேற்பட்டு, செயற்குறிப்புகளுக்கு அனுமதி வழங்குவதற்காக, குழு அரசை அணுக வேண்டும். மேற்சொன்ன வரையறைகளுக்கு மேற்பட்டு நிதிகளை வழங்குவதற்காக, அரசின் முன் ஒப்புதலை, குழு பெற வேண்டும்.

(5) நிருவாகம், பணியாளரமைப்பு அல்லது சில்லறைச் செலவு ஆகிய அனைத்திற்குமான செலவு, யாதொரு சமயத்திலும், நிதியின் மொத்த அளவில், ஐந்து சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

7. *கட்டுப்பாட்டு முறை.*—(அ) உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுக்கான கட்டணங்கள், நிதியின் கணக்கிற்கு ஆண்டுதோறும் அரசால் மாற்றப்படும்.

(ஆ) நிதியின் கணக்கு, வரவுகள் மற்றும் தொகை செலுத்தியது குறித்த அனைத்து நிதிப்பற்றுவரவுகளைக் கொண்டிருக்கும். மாநில அரசு அல்லது மத்திய அரசு நிதியுதவியளிக்கிற ஏனைய சிறப்புத் திட்டங்கள் தொடர்பான வரவுகள் மற்றும் பற்றுகளை, நிதியின் கணக்கு, கொண்டிருக்காது.

8. *வைத்துவரப்பட வேண்டிய பதிவேடுகள்.*—கீழ்க்காணும் பதிவேடுகள் மற்றும் பதிவுருக்களின் பராமரிப்பு, குழுவின் உறுப்பினர் செயலாளரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின் கீழ்இருக்கும்:—

1. ரொக்கப்புத்தகம்
2. காசோலைப் புத்தகம்
3. வங்கிக்கணக்குப் புத்தகம்
4. மானியம் குறித்த பதிவேடு
5. வரவுகள் மற்றும் கட்டணங்களை வகைப்படுத்துவதற்கான பேரேடு
6. ஆண்டுக்கணக்கு
7. இருப்புப் பதிவேடு மற்றும்
8. கருவிகள் மற்றும் தளவாடங்கள் குறித்த பதிவேடு
9. பணியாளர்கள் குறித்த பதிவேடு.

அரங்க செல்லமுத்து,
அரசு செயலாளர்.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU